DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 193/2023

Miscellaneous :

Sessions : PW 3

Deposition of Witness for

**3 ஆம் எதிரி ஆஜர் மற்ற எதிரிகளுக்கு எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | மணி |
| Father / Husband Name | பெருமாள் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 22.10.2024

**முதல் விசாரணை:**

**1.** நான் தற்பொது அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.08.2015 ம் தேதி நான் அச்சரபாக்கம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது காவல் ஆய்வாளர் பரந்தாமன் மற்றும் உதவி ஆய்வாளர் சதாசிவம், சிறப்பு உதவி ஆய்வாளர் ஸ்ரீதர் மற்றும் காவலர்கள் பண்ணீர் செல்வம் சந்திரசேகர் சண்முகம் ஜெயபால் ஆகியோருடன் இரவு ரோந்து பணிக்காக அதிகாலை 4.30 மணிக்கு ஜிஎஸ்டி நெடுஞ்சாலையில் கண்காணித்து வரும்போது நடுப்பழனி ஆர்ச் அருகே பாலமுருகன் அப்சர்அலி உச்பர் ரகுமான் அருண் கார்த்திக் குமார் ஶ்ரீதர் ஆகியோர்கள் எந்த விதமான முன் அறிவிப்பும் இல்லாமல் ஒன்று கூடி அரசுக்கு எதிராக மதுபான கடைகளை மூட வேண்டும் என்று சத்தம் இட்டுக்கொண்டு அரசு சொத்துக்கு சேதம் விளைவிக்கும் வகையில் கோஷம் இட்டுக்கொண்டு இருந்தனர். அதிகாலை 5.30 மணிக்கு கைது செய்து விசாரித்து 5.30 மணிக்கு நிலையம் ஆஜர்படுத்தினோம். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

2. நான் ரோந்து பணியை இரவு 8.00 மணிக்கு ஆரம்பித்து விடியற்காலை 6.30 மணிக்கு முடித்தேன். எதிரிகள் அனைவரும் வெவ்வேறு ஊரை சேர்ந்தவர்கள். 5 ம் எதிரியை தவிற மற்ற 5 பேரும் அரசியல் கட்சியை சார்ந்தவர்கள் என்றால் எனக்கு தெரியும். 5 ம் எதிரி கொலை குற்றம் சாட்டப்பட்டு அவர் மீது தற்போது வரை வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. தேசிய நெடுஞ்சாலைக்கு அருகில் மது பான கடைகள் மூட வேண்டும் என்று பொது மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எந்த மது பான கடைகளும் நாங்கள் ரோந்து பணிக்கு சென்றபோது திரக்கவில்லை என்றால் சரிதான்.

3. மதுபான கடை திரந்திருந்தால் தான் போராட்டத்தை மக்கள் நடத்துவார்கள் என்றால் சரிதான். கைது செய்தபோது எதிரிகளின் பெயர் ஊர் விவரங்கள் தெரியாது என்றால் சரிதான். நாங்கள் முன்னெச்சரிக்கையாக பிரச்சணை வரக்கூடாது

என்றுஎதிரிகளின் வீட்டில் வைத்து  எதிரிகள் அரசியல் சார்ந்தவர்கள் என்பதையும் வழக்கு நிலுவையில் உள்ளது என்பதை தெரிந்தும் கைது செய்தோம் என்றால் சரியல்ல.  நான் சொல்லவது போல் சம்பவ இடத்தில் சம்பவ நேரத்தில் எதிரிகள் யாரும் போராட்டம் செய்யவில்லை என்றாலும் புள்ளி விவர கணக்கிற்காகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிகள் சம்பவ இடத்தில் இருந்ததால் பொது மக்களுக்கோ போக்குவரத்துக்கோ இடைஞ்சல் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எவ்வளவு நேரம் சாலை மரியல் செய்யப்பட்டது என்றால் 15 நிமிடம் இருக்கும்.  மேற்படி நேரத்தில் போக்கு வரத்து நெரிசல் ஏற்பட்டது.  பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டதா என்றால் குறிப்பிட்டு அவர்களை விசாரிக்கவில்லை.  சுமார் 8 பேர் ஒன்று கூடி கோஷம் இட்டார்கள்.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 193/2023

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**3 ஆம் எதிரி ஆஜர் மற்ற எதிரிகளுக்கு எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | பன்னீர்செல்வம் |
| Father / Husband Name | சுந்தரமூர்த்தி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 22.10.2024

**முதல் விசாரணை:**

**1.** நான் இறுதியாக மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 04.08.2015 ம் தேதி நான் அச்சரபாக்கம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது காவல் ஆய்வாளர் பரந்தாமன் மற்றும் உதவி ஆய்வாளர் சதாசிவம், சிறப்பு உதவி ஆய்வாளர் ஸ்ரீதர் மற்றும் காவலர்கள் மணி சந்திரசேகர் சண்முகம் ஜெயபால் ஆகியோருடன் இரவு ரோந்து பணிக்காக அதிகாலை 4.30 மணிக்கு ஜிஎஸ்டி நெடுஞ்சாலையில் கண்காணித்து வரும்போது நடுப்பழனி ஆர்ச் அருகே பாலமுருகன் அப்சர்அலி உச்பர் ரகுமான் அருண் கார்த்திக் குமார் ஶ்ரீதர் ஆகியோர்கள் எந்த விதமான முன் அறிவிப்பும் இல்லாமல் ஒன்று கூடி அரசுக்கு எதிராக மதுபான கடைகளை மூட வேண்டும் என்று சத்தம் இட்டுக்கொண்டு அரசு சொத்துக்கு சேதம் விளைவிக்கும் வகையில் கோஷம் இட்டுக்கொண்டு இருந்தனர். அதிகாலை 5.30 மணிக்கு கைது செய்து விசாரித்து 5.30 மணிக்கு நிலையம் ஆஜர்படுத்தினோம். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

2. நான் ரோந்து பணியை இரவு 8.00 மணிக்கு ஆரம்பித்து விடியற்காலை 6.30 மணிக்கு முடித்தேன். எதிரிகள் அனைவரும் வெவ்வேறு ஊரை சேர்ந்தவர்கள். 5 ம் எதிரியை தவிற மற்ற 5 பேரும் அரசியல் கட்சியை சார்ந்தவர்கள் என்றால் எனக்கு தெரியாது. 5 ம் எதிரி கொலை குற்றம் சாட்டப்பட்டு அவர் மீது தற்போது வரை வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. தேசிய நெடுஞ்சாலைக்கு அருகில் மது பான கடைகள் மூட வேண்டும் என்று பொது மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எந்த மது பான கடைகளும் நாங்கள் ரோந்து பணிக்கு சென்றபோது திரக்கவில்லை என்றால் சரிதான்.

3. மதுபான கடை திரந்திருந்தால் தான் போராட்டத்தை மக்கள் நடத்துவார்கள் என்றால் சரிதான். கைது செய்தபோது எதிரிகளின் பெயர் ஊர் விவரங்கள் தெரியாது

என்றால் சரிதான். நாங்கள் முன்னெச்சரிக்கையாக பிரச்சனை வரக்கூடாது என்று எதிரிகள் அரசியல் சார்ந்தவர்கள் என்பதையும் வழக்கு நிலுவையில் உள்ளது என்பதை தெரிந்தும் கைது செய்தோம் என்றால் சரியல்ல. நான் சொல்லவது போல் சம்பவ இடத்தில் சம்பவ நேரத்தில் எதிரிகள் யாரும் போராட்டம் செய்யவில்லை என்றாலும் புள்ளி விவர கணக்கிற்காகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.